2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

புதிய கட்டடம்

***36538—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று எண்ணும் முன்னே உணவு கொடுத்தார், உடை கொடுத்தார், வீடு கொடுத்தார் மேலும், பொன்னும் கொடுத்தார், பொருளும் கொடுத்தார், போதாது, போதாது என்றால் இன்னும் கொடுப்பார், கொடுத்துக் கொண்டே இருப்பார், இன்னும் போதாது, போதாது என்றால் தன்னையே கொடுப்பார் இந்தத் தமிழக மக்களுடைய நல்வாழ்விற்காக. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் காத்திட தன்னை அர்ப்பணித்து இரவு பகல் பாராது, ஊன், உறக்கம் பாராது, அயராது உழைத்து வருகின்ற தமிழர் குல சாமி அம்மா அவர்கள் இப்பூவுலகில் அவதரித்திட்ட புனிதத் திருநாள் நாளைபதினம், பிப்ரவரி 24 ஆம் தேதி. இந்த வேளையிலே எங்கள் உயிரினும் மேலான தலைவி, நாங்கள் தெய்வமாக வணங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டவுடன் அரசளவில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய நாள் தமிழகத்தினுடைய பொன்னாள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்து, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திய இதய தெய்வம் மக்களின் முதல்வர், ஏழை எளிய மக்களுடைய கண் கண்ட தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 67-வது பிறந்த நாள். அந்த 67-வது பிறந்த நாளில், எல்லாம் வல்ல இறைவன் அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து, எல்லா நலமும், வளமும் அவர்களுக்கு அளித்து, மீண்டும் தமிழக முதல்வராக அமர (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவனை வணங்குகிறேன். வெற்றி மீது வெற்றி வந்து கழகத்தைச் சேரும். அதைப் பெற்றுத் தந்த பெருமை எல்லாம் அம்மாவைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எப்போதும் வெற்றி. வெற்றி, வெற்றி, வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு படைத்திட்ட பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்த்தப்பட்ட ஸ்ரீரங்கத்தில் வெற்றி. எதிர்காலத்தில் 2016-ல் 234 தொகுதிகளிலும் வெற்றி, வெற்றி, வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வென்றே தீரும். விடியும்வேளை வரப் போகுது, தருமம் தீர்ப்பைத் தரப் போகுது, நியாயங்கள் சாவதில்லை, என்றும் நியாயங்கள் சாவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 67-வது பிறந்த நாளில், மாண்புமிகு அம்மா அவர்கள் எல்லா நலமும், வளமும் பெற்று, மீண்டும் தமிழகத்தின் முதல்வராக அரியணை ஏற எல்லாம் வல்ல இறைவனை மீண்டும் வணங்கி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி அவர்களின் பொற்பாதம் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டது கிடைக்கும் என்று சொல்வார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே கேட்காமலேயே, குறிப்பறிந்து, வாரி வழங்கக்கூடிய வள்ளல்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான்

2015 பிப்ரவரி 23]

இந்தக் கேள்வியைக் கேட்கும் முன்னே அதற்கு விடை அளித்த எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டித் தருகிறேன் என்றும், அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது என்றும் சொன்ன மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விடத்தில் புதிய கட்டடம் கட்டித் தந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 67-வது பிறந்த நாளில் பரிசாக வழங்க வேண்டுகிறேன். எங்கள் இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா,

"நீங்கள் நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற
என்றும் நல்லவங்க எல்லாரும் உங்க பின்னாலே
நீங்க நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே
நீங்கள் நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற"
(மேசையைத் தட்டும் ஒலி)

67-வது பிறந்த நாளில் அம்மா அவர்களின் மலர்ப் பாதத்தை மீண்டும் வணங்கி, வட்டாட்சியர் அலுவலகத்தை மதிப்பீடு பெற்று கட்டித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து, கலிங்கபேட் பகுதியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதையும் கட்டுவதற்கு தாங்கள் உதவ வேண்டுகிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

வன அலுவலகக் கட்டடம்

***53533—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—